பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 24 | புதன்கிழமை | 08.01.2025 | அதிர்வு 159

## இலங்கைக்கு வருவார் இந்தியப் பிரதமர் மோடி



இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடத்திற்குள் இலங்கைக்கு விஜயம் செய்வார் என

05

### உள்ளூராட்சி தேர்தலுக்காக முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட

# வேட்புமனுக்களை ரத்துச்செய்வதற்கு சட்டமூலம் வந்தது




## வர்த்தமானியில் பிரசுரம்

2023 உள்ளூராட்சி தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்வதற்கும் புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கும் வழி செய்யும் விதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வரைவு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கோரப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

05

# கட்டுநாயக்காவில் விமான தரை இறக்கம் அடர்ந்த பனிமூட்டம் காரணமாகப் பாதிப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை தரையிறங்க வந்த நான்கு விமானங்கள், அடர்ந்த கடும் பனிமூட்டம் காரணமாக கட்டுநாயக்க விமான நிலைய ஓடுபாதைய. விமானிகள் சரியாக பார்க்க முடியாததால் மத்தள மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்கு விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன்படி, துபாயிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் UL-226 சீனாவின் குவான்ஸ்கூவில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL-881 மற்றும் இந்தியாவின் பெங்களூரில் இருந்து வந்த ஸ்ரீலங்கன்

05






### தொல்லியல் திணைக்கள நடவடிக்கையால்

# வெருகல் வட்டவான் பகுதியில் பதற்றம்; இன்று ஆர்ப்பாட்டம்!

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்டுள்ள பலகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

“1 KM வட்டவான்

05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மாவை சேனாதிராஜா நீக்கப்படுகின்றமையை ஆட்சேபித்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சத்தம் சந்தடியின்றி வாபஸ் பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாவை சேனாதிராஜா பதவியில் இருந்து இறக்கப்பட்டு விட்ட நிலையில், இனி அந்த வழக்கை தொடர்வதில் அர்த்தமில்லை என்று மனுதாரரான முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் கருதியிருக்கக்கூடும்.

தமிழரசுக் கட்சிக்குள் நிர்வாகக் குளறுபடிகள், ஊழல், மோசடிகள் என்று அண்மைக்காலத்தில் அதிகம் சத்தமிட்டு வருபவர் மருத்துவர் சிவமோகன்.

அவர் தொடர்பான சில விடயங்களை நமது செய்தியாளர் கிண்டிக் கிளறி கொண்டு வந்திருக்கிறார். அவற்றின் சட்ட ரீதியான ஆதாரங்களைப் பெறுவதற்கு ஓரிரு நாள்கள்

05

### தீர்வு விடயத்தில் ஒன்றிணைந்து இணக்கப்பாட்டை எட்ட

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜனவரி 25 ஆம் திகதி பேச்சு

## கஜேந்திரகுமார் எம்.பி. தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

புதிய அரசமைப்பு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து இணக்கப்பாட்டை மேற்கொள்வதற்கான சந்திப்பை எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு இடையில் நடந்த சந்திப்பில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

"இதுவரை நாங்கள் மூன்று தரப்பும் தனித்தனியாகச் சந்தித்து வந்த கட்டத்தில் இந்தத் தரப்புக்களை ஒன்றாகச் சந்தித்து இணக்கப்பாட்டை எட்ட எண்ணியுள்ளோம். இந்த மூன்று கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அந்தந்தக் கட்சிகள் இந்த முயற்சிக்கு யாரைக் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகின்றனவோ அவர்கள் அந்தத் தரப்புகளைச் சேர்த்துக்கொள்ளலாம்.



இந்தச் சந்திப்பு ஓர் ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைய வேண்டும். இந்த மூன்று தரப்புகளுக்கும் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய ஆணையை வழங்கியுள்ள நிலையில் அந்த ஆணையை முழுமையாகப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு பொது நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தேவைப்படும் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் நோக்கோடுதான் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது." - என்றார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்து

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கினால் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் . அப்போதுதான் வெளிநாட்டிலுள்ள இலங்கை தமிழர்கள் இங்கு முதலீடு செய்வார்கள். கடந்த காலங்களில் முதலீடுகளை செய்தவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தும் சூழலே காணப்படுகிறது.

ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தினை மன்னாரில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பில் ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எனவே இந்த வளாகத்தினை அமைக்க வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

முப்படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார்.

வன்னியில்தான் கூடுதலான மக்களின் நிலங்கள் முப்படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும். இதுதொடர்பில் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பேசியுள்ளோம்.




மன்னாரை எடுத்துக்கொண்டால் முள்ளிக்குளம், தலைமன்னார் பியர், மன்னார் போன்ற இடங்களை உதாரணமாக கூற முடியும்.

கிழக்கில் வாழைச்சேனையில் மக்களின் விவசாய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனை பாராட்டுகின்றேன்.

வன வளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவையே மக்களின் காணிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

இவர்களினால் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன . இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்கள் இலங்கை திரும்ப விரும்பும் நிலையில் அவர்கள் கடவுச்சீட்டுக்களை பெறுவதில் சிக்கல் உள்ளது. எனவே அவர்களை கப்பலில் அழைத்து வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."- என்றார்.

# இந்திய இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்த முடியாவிடில் வடபகுதி மீனவர்களிடம் அந்தப் பொறுப்பை வழங்குங்கள்!

## ரவிகரன் எம்.பி. காட்டம்

(பா.சதீசன்)

அதிகரித்துள்ள இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகை மற்றும் அதிகரித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் வடபகுதி மீனவர்களின் பருவகால இறால்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையினையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு அரசால் கட்டுப்படுத்தமுடியாதெனில், அந்தப் பொறுப்பை மீனவ மக்களிடம் ஒப்படைக்குமாறும். அவர் தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தின் பொருளாதார விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

வடபகுதியில் சட்டவிரோத கடற்றொழிலால் மக்கள் முற்றுமுழுதாக நசுக்கப்படுகின்றார்கள். மக்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே இந்த விடயத்தை புதிய அரசின் கவனத்திற்காகக் கொண்டுவருகின்றேன்.

இலங்கை எமது நாடு, கடலால் சூழப்பட்ட வளம் பொருந்திய நாடு. வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பூர்வீகத் தாயகம். எமது நாட்டிற்கு எல்லைகள் உண்டு. அடுத்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லைகளைத் தாண்டி வரமுடியாது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு, கடலிலே கண்காணிப்பதற்கு கடற்படை உண்டு.

இங்கே வடக்கு பகுதியில் என்ன நடக்கின்றது? முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இலட்சக்கணக்கான மீனவர்கள் வடபகுதியில் உள்ளனர். இவர்களுடைய வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது. செய்வதறியாது மக்கள் குமுறுகின்றனர். இந்திய இழுவைப்படகுகள் எமது மீனவர்களின் வாழ்க்கையைச் சிதைக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் மார்கழி, தை, மாசி மாதங்கள் இறால் பருவகாலத் தொழிலை வடக்கில் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி உட்பட சில இடங்களிலுள்ள மக்கள் மேற்கொள்வார்கள். இப்பகுதி மீனவர்களின் வருடாந்த சேமிப்பாக இந்த மூன்ற. மாதகால தொழில் அடங்கும்.

கடந்த சில வருடங்களாக இறால் சீசன் என்று சொல்லக்கூடிய, இறால் பருவகாலத் தொழில் செய்வதற்கு இந்திய இழுவைப்படகுகள் முட்டுக்கட்டை போடுகின்றார்கள். முல்லைத்தீவின் கடற்கரையோரங்களுக்கு இந்திய இழுவைப்படகுகள் வருகை தந்து இழுவைமடி, சட்டவிரோத தொழிலை செய்வதால் எமது மீனவர்களின் தொழில்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.




கடற்படையினர் எமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதை விட இந்திய இழுவைப்படகுகளின் சட்டவிரோத தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கின்றார்களோ என்ற சந்தேகம் மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஏன், அண்மையில் மியன்மார் நாட்டிலிருந்து படகில் வந்த அகதிகள்கூட முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வரும் வரை கடற்படைக்குத் தெரியாது. இந்த நிலைமைகள் மாற வேண்டும்.

எமது மீனவர்கள் சுதந்திரமாக எமது கடலில் மீன்பிடிக்க வேண்டும். தங்களின் வாழ்வாதாரத்தை அவர்கள் பார்க்கவேண்டும். சட்டவிரோத தொழில்கள் யார் செய்தாலும் தடுக்கப்பட வேண்டும். தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்த நாடுகளின் படகுகள் தங்களுடைய கடலில் தொழில் செய்யட்டும். எல்லை தாண்டி எமது கடற்பரப்புக்குள் அந்நியப் படகுகள் நுழைவதைக் கடற்படை தடுக்கவேண்டும். இதனைக் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

உங்களால் முடியாவிட்டால் எமது மீனவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படையுங்கள். கலங்களையும் தாருங்கள். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

தயவு செய்து வடபகுதி மீனவர்களை வாழவிடுங்கள். புதிய அரசானது பாகுபாடு காட்டாமல் எமது மீனவ மக்களைப் பாதுகாக்கும் என்று நம்புகின்றோம். – என்றார்.

# மோட்டார் வாகன பரிசோதகர்களின் ஊடாக பஸ்களை சோதனைக்குட்படுத்த நடவடிக்கை



பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களை மோட்டார் வாகன பரிசோதகர்களின் ஊடாக சோதனைக் குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருடனான கூட்டு வேலைத்திட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை முதல் இந்த விசேட வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார்.

இதன்போது பஸ்களில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அபாயகரமான பொருத்துக்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, முன்னெடுக்கப்படும் போக்குவரத்து செயற்றிட்டம் எவ்விதத்திலும் நிறுத்தப்பட மாட்டாதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் மேலும் சரிவு




கொழும்பு பங்குச் சந்தையின் விலைச்சுட்டெண் நேற்று மேலும் சரிவைச் சந்தித்தது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 23.96 புள்ளிகளால் சரிவடைந்தது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 15,854.64 புள்ளிகளாகப் பதிவாகியது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்றைய தினம் 4.5 பில்லியன் ரூபாவாக பதிவாகியது.

# கேரளா கஞ்சா, போதை மாத்திரைகளுடன் சிகை அலங்கரிப்புத் தொழிலாளி கைது!

## பெரியநீலாவணைப் பகுதியில் சம்பவம்












(பாறுக் ஷிஹான்)

கேரளா கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை இளைஞர்களுக்கு விநியோகம் செய்த சந்தேகத்தின் அடிப்படையில் 29 வயது சந்தேக நபர் ஒருவரை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது நேற்று மதியம் அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணைப் பொலிஸ் பிரிவில் உள்ள பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் இயங்கும் சிகை அலங்காரம் செய்யும் கடையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது அந்தக் கடையில் 220 மிலிலி கிராம் கேரளா கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் உள்ளடங்கலாக தன்வசம் வைத்திருந்த சிகை அலங்காரம் செய்யும் 29 வயது சந்தேக நபர் கைதானார்.

மேலும் சந்தேக நபரரை சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜே.எஸ். கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவைப்படுகின்றன. அதன் பின்னர் அவற்றின் விவரத்தை பார்ப்போம்.

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டு விவகாரங்கள் குழப்பத்தில் என்றால், தேசிய மட்டத்தில் அதன் செயற்பாடு குறித்தும் பிரதான எதிர்க் கட்சிகள் தரப்பில் பெரும் விசனம் தெரிவிக் கப்படுகின்றது. தேசிய ரீதியில் முக்கியத் துவம் வாய்ந்த ஒரு பிரதான விடயத்தில் தமிழரசுக் கட்சி அரசு தரப்புடன் சேர்ந்து நின்று எதிர்க்கட்சியினருக்கு 'ஸேம் சைட்' கோல் அடித்து விட்டதாக எதிரணியினர் பெரும் சீற்றத்தில் இருக்கின்றனர் என அறிய வந்தது.

விடயத்துக்குள் இறங்க முன்னர் 'பிளாஷ் – பேக்' விடயம் ஒன்றை நோக்க வேண்டும்.

ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி. படு கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கி இருந்த பிள்ளையான் எனப்படும் சிவ நேசதுரை சந்திரகாந்தன் பின்னர் விடு விக்கப்பட்ட விடயம் தொடர்பாக பலத்த அர சியல் சர்ச்சை தொடர்வது தெரிந்ததுதான்.

பிள்ளையானுக்கு எதிராக அளிக்கப் பட்டதாகக் கூறப்படும் வாக்குமூலம் ஒன்று மேல் நீதிமன்றம் நடத்திய 'வொயர் – டயர்' விசாரணையில் அவருக்கு எதிரான சாட்சியமாக நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த ஆவணம் பின் னர் மேன்முறையீடு மூலம் நிராகரிக்கப் பட்ட முறைமை குறித்தே இப்போது பெரும் சர்ச்சைகைகள் நீடிக்கின்றன. இது தொடர்பில் பிள்ளையானுக்கு முன் னர் உதவியாளராக இருந்த ஆஸாத் மௌலானா வெளிநாட்டில் இருந்தபடி வழங்கிய வாக்குமூலமே இப்போது சர்ச்சைகளுக்கு மூலம் என்பது எல்லோ ருக்கும் தெரிந்த விடயம்.

பிள்ளையானுக்கு எதிரான வழக்கை சட்டரீதியாகக் குளறுபடி பண்ணுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அச்சமயத் தில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரலாக இருந்த மாதவ தென்னக்கோன் என் பவர்இடமளிக்காமல்–உறுதியாக–நேர்மை யாக – செயற்படக் கடுமையாக முயன்றார் என்று ஆஸாத் மௌலானா தமது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டு இருந்தார். அது பற்றிய விடயம் முன்னைய நாடாளுமன் றத்திலும் விவரமாக எதிரணி தரப்புக ளால் விவரிக்கப்பட்டு இருந்தது. அதிலும் மாதவ தென்னக்கோனின் நீதி முறை மையான – உறுதியான – செயற்பாடும் நிலைப்பாடும் பாராட்டப்பட்டிருந்தன.

இப்போது மாதவ தென்னக்கோன் சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தில் தமிழரசு கட்சி நடந்து கொண்டுள்ள ஒரு விவ காரமே பெரும் சர்ச்சைக்கு உரியதாக மாறியிருக்கிறது.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகத்தை ஜனா திபதி நியமிப்பதற்கு உரிய பரிந்துரை களை அரசமைப்புக் கவுன்ஸில் வழங்க வேண்டும். இப்பதவிக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டன. விண்ணப்பித்தவர் களை அரசமைப்பு கவுன்ஸிலில் நேர்முகம் கண்டு, அந்த நேர்முகத்தின் அடிப்படை யில் புள்ளி இட்டு, வரிசைப்படுத்தியது. அதன்படி முதல் நிலையில் மாதவ தென் னக்கோனும், இரண்டாவது நிலையில் முன்னாள் நீதிபதி திஸநாயக்க என்ப வரும் தெரிவாகி இருந்தனர்.

ஆயினும், அரசு தரப்பு இரண்டாவது இடத்தில் வந்த திஸநாயக்காவை அப்பத விக்கு தேர்வு செய்ய ஒற்றைக்காலில் நின்றது. ஆனால் அரசமைப்பு கவுன்ஸி லில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கபீர் காஸிம் மற்றும் இரண்டு சிவில் சமூகப் பிரதிநிதிகள், சுயாதீனமாக செயல்படுவதில் தமது தனித்துவத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் மாதவ தென்னக்கோனை அந்தப் பதவிக்கு நிய மிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நின்றனர்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட் சிகளின் சார்பில் ஒருவரை நியமிப்ப தற்கான தேர்தலில் ஒரே ஒரு வாக்கு வித் தியாசத்தில் ஜீவன் தொண்டமானை வென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் சிறிதரன் தெரிவாகி இருந்தார்.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகத்தைத் தெரிவு செய்வதற்காக நேற்று அரசமைப்பு கவுன் ஸில் கூடிய போது எதிர்க்கட்சித் தலை வரும் மற்றவர்களும் எடுத்த நிலைப்பாட டுக்கு மாறாக, அரசு தரப்போடு சேர்ந்து சிறிதரன் வாக்களிக்க, மாதவ தென்னக் கோன் 4 – 5 என்ற வாக்குகள் அடிப்படை யில் நிராகரிக்கப்பட்டு திஸநாயக்கா தெரிவானார். சிறிதரன் தங்களுடன் சேர்ந்து வாக்களித்திருந்தால் மாதவ தென்னக்கோனை அரசமைப்புக் கவுன் ஸில் பரிந்துரைக்கும் முடிவு வந்திருக்கும் என்பது எதிரணிகளின் சீற்றம்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி அரசு தரப் புடன் சேர்ந்து வாக்களித்து, எதிரணி நிலை நாட்ட முயன்ற நடுநிலைத் தன் மையையும் நேர்மையான தெரிவையும் பாழ்படுத்தி விட்டார் என்று எதிர்க்கட்சி தரப்புகள் சீறுகின்றன.

இனிஎன்ன?மதுபானசாலைபர்மிட்விட யத்தில் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டிய விசாரணை பிரிவின் தலை வராக தெரிவு செய்யப்பட்டவர் எப்படி நடந்து கொள்வார், உண்மைகள் எப்படி வெளியாகும் என்பவை தொடர்பில் எதிர்க் கட்சிகள் தரப்பில் சந்தேகம் கிளப்பப் படுகிறது.

# வெள்ள நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு!

## முகமாலையில் துயரம்

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் வீதியில் தேங்கிக் காணப்பட்ட வெள்ள நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள் ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முகமாலை வடக்கு, பளையைச் சேர்ந்த மாணிக்கம் உதயகுமார் என்ப வரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் முகமாலை வடக்கு பகுதியில் ஆட்கள் நடமாட்டம் குறைந்த வீதியால் பயணித்தபோது வீதியில் தேங்கிக் காணப்பட்ட வெள்ள நீரில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

## கட்டுநாயக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எயார்லைன்ஸ். UL-174 ரக மூன்று விமா னங்களை மத்தள விமான நிலையத் திற்கு திருப்பிவிடப்பட்டன.

மேலும், துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து காலை 06.00 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்த டைந்த துருக்கிய ஏர்லைன்ஸ் விமானம் வுமு-730, இந்தியாவின் திருவனந்த புரம் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது.

மத்தள விமான நிலையத்திற்கு அனுப் பப்பட்ட இலங்கை விமானங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த விமானங்களில் இருந்த பயணிகள் இறக்கிவிடப்படவில்லை. வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்ட அனைத்து விமானங்களும் காலை 09:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குத் திரும்பின.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் நிலவிய அடர்ந்த பனிமூட்டம் காலை 07.00 மணியளவில் படிப்படியாக மறைந் ததையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து விமானங்களும், திரும்பிச் செல்லாமல், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரை யிறங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

## வெருகல் வட்ட...

(முதலாம் பக்க

தொல்லியல் நிலையம்" என குறிப்பிட்டு குறித்த

பலகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்பட் டுள்ளது. இது குறித்து தொல்லியல் திணைக்களத்தின் பலகை எதிர்ப்பு தெரி வித்து இன்று புதன் கிழமை வெருகல் பிரதேச செயலகத்திற்கு முன்னால் மக் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேட்பு மனுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டமூலத்தின்படி, 2023 மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்க-ப்பட்ட வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்ப டும்.

அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர் கள் தொடர்பில் வைப்பிலிடப்பட்ட கட்டுப் பணத்தையும் மீள செலுத்தவும் இந்த சட்டமூலம் வழிவகை செய்கிறது. அதற் கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த சட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

அதன்படி, உள்ளூராட்சித் தேர்தலுக் கான வேட்புமனுக்களை கோரும் திக தியை தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும் எனவும் குறித்த திகதி சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து 3 மாத காலத்திற்கு இடைப் பட்ட நாளாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு வருவார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ் தானிகர் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களுடனான கலந் துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் இந்திய பிரதமரின் வருகைக் கான திகதிகள் இன்னும் இரு தரப்பின ராலும் முடிவு செய்யப்படவில்லை என்றார் அவர்.

இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா செய்தியாளர்களிடம் கூறுகையில் –

"இந்தப் பயணத்திற்கான சரியான நேரத்தை நாங்கள் உருவாக்கும் பணி யில் ஈடுபட்டுள்ளோம்" – என்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த டிசம்பர் நடுப்பகுதியில் புதுடில் லிக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண் டிருந்த போது, பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்தி ருந்தார் என்பது தெரிந்ததே.

# சீனா தொடர்புடைய 5 யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

சீனாவுடன் தொடர்புடைய 5 யோசனைகளுக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அரசு "ஒரே சீனா" கொள்கையைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிப்பது தொடர்பில் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, சீன மக்கள் குடியரசை மாத்திரம் சட்டரீதியான சீனாவாக ஏற்றுக் கொள்வதற்கும் தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையை, சீன சுற்றுலாப் பயணிகளின் முதன்மையான சுற்றுலா மையமாக நிலைப்படுத்தும் நோக்கில் சீன ஊடகக் குழுமத்துக்கும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அமைச்சரை ஒப்புதல் அளித்துள்ளது.

அதேநேரம், இலங்கையிலிருந்து சீனாவுக்குக் கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட சுகாதாரத் தேவைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் அமைச்சரவை இணக்கம் வெளியிட்டுள்ளது.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவர்களுக்குச் சீனாவினால் 35.7 மில்லியன் யுவான் செலவில் வழங்கப்பட்ட அவசர மனிதாபிமான உதவி பொருட்கள் கடந்த ஆண்டு கடற்றொழில் அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டது.



இந்தநிலையில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான குறித்த அவசர மனிதாபிமான உதவி வழங்கல் சான்றில் கைச்சாத்திடுவதற்காகக் கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதேவேளை, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்தும் நோக்கில் இலங்கை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும், சீனாவில் உள்ள சில நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கும் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் முன்வைத்த மேற்படி யோசனைக்கு அமைய, 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

# ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இதுவரையில் விடுவிக்கப்பட்டது



இறக்குமதி செய்யப்பட்ட ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் அறிவித்துள்ளது.

அவற்றில், 40,000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 61,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாகச் சுங்க திணைக்கள ஊடக பேச்சாளரும், சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இம்மாதம் 10ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 வருடங்களின் பின்னர் கூடும் தொழில் ஆலோசனை தெரிவுக்குழு

தொழில் ஆலோசனை தெரிவுக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி கூடவுள்ளது.

2023 ஆண்டுக்குப் பின்னர் தொழில் ஆலோசனை தெரிவுக்குழு கூடவில்லை என தொழில் அமைச்சின் செயலாளர் எம். எம் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

தொழில் ஆலோசனை தெரிவுக்குழு, தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படும்.

தொழிலாளர்கள் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் குறித்து தொழில் ஆலோசனை தெரிவுக்குழுவினூடாகவே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

# அஸ்வெசுமவில் இல்லாத குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கும் 6,000 ரூபா கொடுப்பனவு

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படாத குடும்பங்களிலுள்ள சகல மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவினை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது, அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளைப் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, அந்த குடும்பங்களின் வங்கிக்கணக்கில் 6,000 ரூபாவினை வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நாடளாவிய ரீதியில் 300 இற்கு குறைவான மாணவர்கள் பயிலும் பாடசாலைகளிலுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெறாத குடும்பங்களிலுள்ள சகல மாணவர்களுக்கும் கற்றல் உபகரண கொள்வனவுக்காக 6,000 ரூபா பெறுமதியான வவுச்சர்களை வழங்குவதற்கு கல்வியமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு



அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அத்துடன், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்களுக்கும் பிரிவெனாக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

# 2024ஆம் ஆண்டு சிறுபோகத்துக்கான இழப்பீடு கொடுப்பனவு 90 வீதம் விடுவிப்பு



2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக இழப்பீட்டுக் கொடுப்பனவுகளில் 90 வீதம் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை அவர்களது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 6,459 விவசாயிகளுக்கு 5,246 ஏக்கருக்காக 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயிர் சேதம் ஏற்பட்டுப் பரிந்துரைக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாவிட்டால், மேல்முறையீடு செய்யலாம் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதிய அரசமைப்பு மீது நாட்டம்

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் அரசு தாமதமின்றி ஈடுபட வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசு, புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு தனது பதவிக் காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே பேராயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு விவகாரம் தொடர்பில் மக்களுக்கு - மதத் தலைவர்களுக்கு - சமூக ஆர்வலர்களுக்கு - ஒரு சிந்தனையோட்டம் உண்டு. அது கவனிக்கப்பட வேண்டியது.

கடந்த 46 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் தற்போதைய அரசமைப்பு - நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமைக்கு வழி செய்த யாப்பு - இந்த நாட்டுக்கு உதவாதது என்பது ஐயம்திரிபற எல்லோருக்கும் புரிந்த விவகாரமாகி உள்ளது.

அதிகாரத்தைத் தனி நபரிடம் குவிக்கும் இந்த ஆட்சி முறைமையே, நாடு இத்தகைய மோசமான நிலைமையை அடைவதற்கு ஒரு காரணம் என்று விடயம் அறிந்தவர்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

அதனால் இந்த அரசமைப்பை, மக்கள் மத்தியிலான ஓர் இணக்கத்துடன் மாற்றி அமைப்பது தவிர்க்க முடியாத கட்டாயம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான நாடாளுமன்றப் பெரும்பான்மையும், உருவாக்கப்படக்கூடிய புதிய அரசமைப்புக்கு அங்கீகாரம் அளிக்கக்கூடிய மக்கள் மனநிலையும் இப்போது கூடி வந்துள்ள இந்தச் சமயத்தில் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை சமயோசிதமாக முன்னெடுத்து நிறைவேற்றி விட வேண்டும் என்ற துடிப்பு இலங்கையின் எதிர்காலம் குறித்துக் கவலை கொண்டுள்ள எல்லோரினதும் எண்ணமாக இருக்கின்றது.

'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்பது போல இந்த ஆட்சி முறைமையை மாற்றுவதற்கான மனநிலை மக்களிடம் வரும் போது, அதனை மாற்றுவதற்கான நாடாளுமன்றப் பலமும், அதனை முன்னெடுக்கும் அதிகார வலுவும் கிட்டாமல் போய்விடுகின்றன. மறுவளமாக நாடாளுமன்றப் பலமும் அதிகார வலுவும் கிட்டும் போது புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்து நிலைப்பாடு மக்கள் மத்தியில் தீவிரமாக இல்லாத நிலை காணப்படுகின்றது.

இப்போது இரண்டும் சேர்ந்து கிட்டியுள்ள இந்தச் சமயத்தில் அதை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டும் என்று பேராயர் உட்பட நாட்டின் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் கருதுகிறார்கள்.

ஆட்சிப் பீடம் தன்னுடைய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக புதிய அரசமைப்பு உருவாக்கத்தைக் காலதாமதப்படுத்தினால் அந்தக் காலதாமத வேளையில் அரசியல் சூழ்நிலைகளினால் நிலைமை குழம்பிப் போய் விடக்கூடிய சாத்தியம் உண்டு என்ற அச்சம் பலதரப்பிலும் இருக்கின்றது.

46 வருடங்களாக அசைக்க முடியாமல் இருக்கும் இந்த இக்கட்டை - இந்த அரசமைப்பை - கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வசமாக நிறைவேற்றி விட வேண்டும் என்ற அவசரம் பல தரப்புக்களிலும் தென்படுகின்றது.

ஆனால் நிறைவேற்றதிகாரத்தைப் புதிதாகக் கையில் எடுத்திருக்கும் அநுர குமார திஸநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தியினரும், அந்த அதிகாரத்தை ருசித்துப் பார்த்த பின்னர் ஆட்சி முறைமை மாற்றத்தைச் செய்யலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது என்பது அவர்களுக்கு தெரியவில்லை. காலம் போக சூழலும் மாறிவிடும். அப்போது அணில் ஏறவிட்ட நாய் மாதிரி கீழே இருந்து குரைக்க வேண்டியதுதான்...!

# யாழில் இளைஞர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய பிரதான சந்தேக நபர்கள் மூவர் கைது!

யாழ் நகரில் இளைஞர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்களில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர்கள் என கருதப்படும் மூவர் நேற்றையதினம் கைதுசெய்யப்பட்டனர்.

தலைமறைவாக இருந்த இந்த நபர்கள் யாழ் நகரில் நடமாடுகின்றனர் என யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ் நகரில் புத்தாண்டுக்கு முன்தினம் இரவு வேளை ஒன்றுகூடிய இளைஞர்கள் குழுவினர் ஓட்டோவில் சாகசம் காட்டியதுடன் இளைஞர் ஒருவரை கடுமையாகத் தாக்கியுமிருந்தனர்.

இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இரண்டு ஓட்டோக்களும் கைப்பற்றப்பட்டன.

இப்போது கைதான மூவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மனித பாவனைக்குத் தகுதியேயற்ற 12 ஆயிரம் கிலோ தேயிலைத் தூள்

## உடுநுவர, தவுலகல ஹன்டெஸ்ஸ பிரதேசத்தில் சிக்கியது

உடுநுவர, தவுலகல ஹன்டெஸ்ஸ பிரதேசத்தில் உள்ள தேயிலை களஞ்சியசாலையில் மனித பாவனைக்குத் தகுதியற்ற பன்னீராயிரம் கிலோ தேயிலை தூள் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கம்பளை முகாமின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அனுமதியின்றி இரகசியமாக இந்தக் கழிவு தேயிலைத் தூள் 426 பொலித்தின் பைகளில்

பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

கம்பளை விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நளின் உதாரம்பவுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இந்தஜ் களஞ்சியசாலை சோதனையிடப்பட்டுள்ளது.

தவுலகல, வெலம்பொட, வடதெனிய ஹன்டெஸ்ஸ, லீமகஹகொடுவ,பூவலிகட உள்ளிட்ட உடுநுவர பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் பல வருடங்களாக இந்த கழிவுத் தேயிலை வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் சிலோன் டீயின் பெயருக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சாலைகளில் இருந்து அகற்றப்படும் கழிவு தேயிலையை கொண்டு வந்து சீனி, தேன், சாம்பல் சுண்



ணாம்பு என பல்வேறு இரசாயனங்களை பயன்படுத்தி கறுப்பு தேயிலை தயாரித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தைக்கு விற்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் தேயிலை கையிருப்புடன் அதன் உரிமையாளரும் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தவுலகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கம்பளை விஷேட அதிரடிபடை பொறுப்பதிகாரி நளின் உதாரம்ப, பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.டி. விக்ரமரத்ன மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

# கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே மேலதிகமாக இரு ரயில் சேவைகள்



(கி.வசந்தன்)

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு மேலதிகமாக இரு ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் இன்று மேலும் தெரிவிக்கையில் -

நீண்டகாலமாக யாழ் - கொழும்பிற்கு இடையில் ஒரேயொரு ரயிக் சேவை மட்டும் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பொதுமக்களினால் என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக ஆராய்ந்து, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எனது வேண்டுகோளிற்கு அமைவாக வரும் 15ஆம் திகதியில் இருந்து ஒரு ரயிக் சேவையும், 31 ஆம் திகதியில் இருந்து பிறிதொரு ரயிக் சேவையும் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

# திருகோணமலைக்கு புதிய அரச அதிபர்

(எஸ்.கீதபொன்கலன்)



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிருவாக சேவையையின் விசேட தர அதிகாரி டபிள்யு. ஜி.எம். ஹேமந்த குமார நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சரவை இவருக்கான இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

2003.09.01 ஆம் திகதி இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட இவர் தெஹியத்தகண்டிய உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலாளர், மத்திய மாகாண கைத் தொழில் அமைச்சின் உதவி செயலாளர், மத்திய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர், மத்திய மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் (பதில் கடமை), ஹதரலியத்த மற்றும் தும்பன பிரதேச செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

அரசாங்க அதிபராக நியமிக்கப்பட முன்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக இவர் கடமையாற்றியுள்ளார்.

# சட்டவிரோதமாகப் பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்படுகின்றன









யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் சட்டவிரோதமாக பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வருகின்றன எனப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சி பளைப் பகுதியில் சட்டவிரோதமாக பனை மரம் வெட்டப்பட்ட பகுதியையும் பனை அபிவிருத்தி சபையினர் சுற்றிவளைத்து பிடித்துள்ளமையுடன் சம்பவம் தெடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் செய்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மற்றும் கிளிநொச்சி உட்பட வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பனைமரங்கள் வெட்டப்படுகின்ற பகுதிகளில் பனை அபிவிருத்தி சபையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பளைப் பகுதியில் பல பனை மரங்கள் வெட்டப்பட்டு ஏற்றப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய உடனடியாக பனை அபிவிருத்தி சபையினர் சுற்றிவளைத்தனர்.

இதன் போது அங்கு வெட்டப்பட்ட பனை மரங்களில் ஒரு தொகுதியை ஏற்றிக் கொண்டு சென்றுவிட்ட அதேநேரம் மிகுதி மரங்கள் அங்கு காணப்பட்டன.

இதனையடுத்து சம்பவம் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுகக்கு கோரி பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.







# ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு நிதி, தொழில்நுட்ப உதவிகள்

ஜய்கா எனப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகம் இலங்கைக்கான தங்களது நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இடையூறு இல்லாமல் தொடர்ந்து மேற்கொள்ளும் என அதன் சிரேஷ்ட துணைத் தலைவர் ஹரா ஷொஹெய் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஜப்பானிய உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் அவதானம் இதன்போது, செலுத்தப்பட்டுள்ளது.

ஜய்காவின் ஆதரவின் கீழ் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் துரிதப்படுத்தப்பட்டு வினைத்திறனுடன் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம், நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டின் போது வழங்கப்பட்ட உதவிகளைப் போன்று, எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கான ஜய்காவின் உறுதிப்பாட்டை அதன் சிரேஷ்ட துணைத் தலைவர் ஹரா ஷொஹெய் வலியுறுத்தியுள்ளார்.

“க்ளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் மற்றும் ஏனைய முயற்சிகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு ஜய்கா தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே இலங்கையின் போக்குவரத்து முறைமையை மறுசீரமைப்பதற்கும், நிதி மற்றும் தளபாட உதவிகள் மூலம் நகர்ப்புற தூய்மையை மேம்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதாக ஜய்கா எனப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் சிரேஷ்ட துணைத் தலைவர் ஹரா ஷொஹெய் தெரிவித்துள்ளார்.





# உரும்பிராய்த் தாக்குதல் தொடர்பில் ஐவருக்கு விளக்க மறியல் உத்தரவு!



யாழ்ப்பாணம் – உரும்பிராய் பகுதியில் ஒருவரைக் கட்டி வைத்துத் தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான ஐந்து பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்றையதினம் உத்தரவிட்டது.

கடந்த வாரம் உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பகமொன்றுக்கு வந்த ஒருவர் அப்பகுதியில் நிலத்தில் விழுந்து கிடந்த தங்க ஆபரணத்தை எடுத்து வெதுப்பகத்தில் வழங்கியுள்ளார். சில தினங்களுக்கு பின்னர் அடிக்கடி வந்து நகை உரியவர்களிடம் வழங்கப்பட்டதா என வெதுப்பகத்தில் கேள்வியெழுப்பியுள்ளார். இந்நிலையில் வெதுப்பகத்தில் இருந்த இளைஞர் குழு அந்த நபரைக் கட்டிவைத்துத் தாக்கி அது பற்றிய காணொளியை வெளியிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஐவரும் யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் ஜனவரி 15 வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் லெனின்குமார் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பலாலி விமான நிலையத்துக்கான வரிச் சலுகை ஓராண்டுக்கு நீடிப்பு




யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், கொழும்பு சர்வதேச விமான நிலையம் (இரத்மலான) மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையங்களுக்கான புறப்படுதல் வரிச் சலுகைகளை கீழ்வருமாறு நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

• யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரியில் 50 வீதக் கட்டணத்தை கையுதிர்க்கும் சலுகையை 2026.01.30 வரை நீடித்தல்.

• கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு (இரத்மலான) திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரியில் 50 வீதக் கட்டணத்தை கையுதிர்க்கும் சலுகையை 2025.03.27 தொடக்கம் ஒருவருட காலத்திற்கு நீடித்தல்.

• மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரிக்குரிய சலுகையை முழுமையாக வழங்குவதை 2024.12.29 தொடக்கம் மேலும் ஒருவருட காலத்திற்கு நீடித்தல்.

– நேற்று நடைபெற்ற அமைச்சரவையில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், கொழும்பு சர்வதேச விமான நிலையம் (இரத்மலான) மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையங்களுக்கான சர்வதேச விமான சேவைகளை கவர்ந்திழுக்கும் நோக்கில் வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் சர்வதேச விமான நிலைய சேவைகளுக்கான ஊக்குவிப்புச் சலுகைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விமான நிலையங்களுக்கு புறப்படுதல் வரிச் சலுகைகளை நீடிப்பதற்கு போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுண்ணக்கல்லின் சல்லி எடுத்துச் செல்ல அனுமதி வேண்டுமா? திணைக்கள அறிக்கை பெற சாவகச்சேரி நீதிமன்று கட்டளை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லப்பட்ட சுண்ணக்கல்லை அப்படி எடுத்துச் செல்வதற்கு வழி அனுமதி உண்டா என சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் இருந்து அறிக்கை பெற்றுச் சமர்ப்பிக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முறையான அனுமதி இன்றி சுண்ணக்கல் திருகோணமலை சீமேந்து ஆலைக்கு எடுத்துச் செல்லப்படுவதாக மக்களால் தொடர்ச்சியாகக் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அப்படி சுண்ணக்கல் எற்றி வந்த லொறி ஒன்று ஏ9 வீதியில் வைத்து நாடாளு மன்ற உறுப்பினரால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சுண்ணக்கல் ஏற்றிய வாகனம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் 6 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸாரினால் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு, விடயம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுண்ணக்கல் ஏற்றி வந்த நிறுவனம் சார்பில் சட்டத்தரணி கு.குருபரன் ஆஜரானார்.




இந்த வழக்கை ஆராய்ந்த நீதிவான் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட கனியவளத்தை கனியவளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி இதனை எடுத்துச் செல்ல அனுமதி வேண்டுமா என அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சான்றுப் பொருளை நீதிமன்றப் பாதுகாப்பில் வைத்து, வாகனத்தை உரிமையாளரிடம் கையளிக்கவும் கட்டளையிட்டார்.




# ஜனவரி, பெப்ரவரியில் விசேட ரயில் சேவைகள்

தைப்பொங்கல் பண்டிகை, சுதந்திர விழா மற்றும் வார இறுதி விடுமுறை நாள்களில் கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரையிலும், கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலும் இந்த விசேட ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இந்த வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் விசேட ரயில்களை இயக்குவதற்கு இலங்கை ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பின்வருமாறு விசேட ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1) விசேட ரயில் எண். 01 – கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பாடு – இரவு 07:30 க்கு

இயங்கும் திகதிகள் – ஜனவரி 10, 12, 14, 17, 19, 24, 26, 31 மற்றும் பிப்ரவரி 02, 04.

2) விசேட ரயில் இலக்கம் 02 – பதுளையிலிருந்து கொழும்பு வரை

பதுளையில் இருந்து புறப்பாடு – மாலை 05:40

இயங்கும் திகதிகள் – ஜனவரி 10, 12, 14, 17, 19, 24, 26, 31 மற்றும் பிப்ரவரி 02, 04.

3) விசேட நகரங்களுக்கு இடையேயான ரயில் சேவை (4021 4022) – கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசந்துறைக்கு இடையில்

கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பாடு காலை – 05:30

காங்கேசந்துறையில் இருந்து புறப்பாடு – பிற்பகல் 01:50

இயங்கும் திகதிகள் – ஜனவரி 10, 13, 14, 15, 17, 20, 24, 27, 31 மற்றும் பிப்ரவரி 03, 04.





# இப்போது வழக்குகளுக்கே அதிகளவு பணத்தைச் செலவிடும் ஆலயங்கள்!

## தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழாவில் வடக்கு ஆளுநர் வேதனை

ஆலயங்கள் இப்போது சமூக சேவைக்குச் செலவு செய்வதிலும் பார்க்க வழக்குகளுக்கே அதிகளவு பணத்தைச் செலவு செய்கின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேதனை வெளியிட்டார்.

அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. மல்லாகத்திலிருந்து அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்த்திப் பவனி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலை வந்தடைந்தது. ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், 1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவி அரச அதிபராக இருந்தமையை நினைவுகூர்ந்து அன்றைய நாட்களில் அம்மையாருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்ததாகக் குறிப்பிட்டார். போர் மற்றும் இடப்பெயர்வுகளின்போதும் அம்மையார் சமூகப் பணிகளை திறம்பட முன்னெடுத்தமையை அவர் சுட்டிக்காட்டினார்.

அன்றைய காலத்தில் ஆலயங்கள் சமூகப் பணிகளை முன்னெடுக்காதிருந்த சூழலில், அம்மையாரே அதனைத் தொடக்கி அதன் முன்னோடியாக இருந்ததாகவும் ஆளுநர் புகழாரம் சூட்டினார்.

இன்று ஆலயங்களில் உண்மையான கடவுள் பக்தி இல்லை என வேதனை வெளியிட்ட ஆளுநர், இதனால் பல ஆலயங்கள் நீதிமன்றப் படியேறியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

புலம்பெயர் தேசங்களிலிருந்து ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டாலும் ஆலய நிர்வாகங்கள் ஒழுங்காக கணக்கறிக்கைகள் முன்வைப்பதில்லை எனவும், இது பிரச்சினைகளுக்கு அடிநாதமாக இருக்கின்றது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

தனது காலத்தின் பின்னரும் இந்த அறப்பணிகள் தொடர்ந்தும் தடையுறாது முன்னெடுத்துச் செல்வதற்கு பொருத்தமான ஒருவரான கலாநிதி ஆறுதிருமுருகனை அம்மையார் வளர்த்து அடையாளம் காட்டியதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அவரின் சேவைகளையும் பாராட்டினார்.

காய்க்கின்ற மரம் கல்லெறி படுவதைப்போல அவர் மீதும் பலர் விமர்சனங்களையும் குறைகளையும் முன்வைக்கின்றனரே தவிர அவர் செய்யும் சேவைகளைப் பாராட்ட முன்வருவதில்லை என ஆளுநர் கவலை வெளியிட்டார்.

எமது சமூகத்தில் இந்த விடயம் இப்போது ஆழமாக வேரூன்றி விட்டதாகக் குறிப்பிட்ட ஆளுநர், ஆறுதிருமுருகன் மீதான நம்பிக்கையிலேயே புலம்பெயர் தேசத்திலிருப்பவர்களும் இங்கிருப்பவர்களும் அவர் ஊடாக உதவிகளைச் செய்ய முன்வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சமூகப் பணிகள் எமது மக்களுக்கு மிக அவசியமானவை என குறிப்பிட்ட ஆளுநர், இதைத் தொடரவேண்டும் என்றும் வாழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமை தாங்கினார். நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, இந்து மதக் குருக்கள், மக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.









# பதவி விலக இணங்கினார் கனடாப் பிரதமர் ட்ரூடோ!

ஒன்பது ஆண்டுகளாகக் கனடா பிரதமராக பதவி வகித்து வந்த ஜஸ்டின் ட்ருடோவின், பதவி விலகல் அறிவிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தை பாதிக்குமா என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கனடா நாட்டின் பிரதமராக பொறுப்பேற்ற ஜஸ்டின் ட்ரூடோ, ஒரு காலத்தில் கனடா நாட்டு மக்கள் விரும்பும் தலைவராக விலகினார்.

தாராளமயக் கொள்கைக்காக ஆரம்ப கட்டத்தில் அவர் பாராட்டப்பட்டாலும், பணவீக்கம் அதிகரிப்பு , வீட்டுவசதி நெருக்கடி, வெளிநாட்டினர் குடியேற்றம் அதிகரிப்பு போன்ற பிற பிரச்சினைகள் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்குக் குறைந்துள்ளது.

இந்நிலையில், உள்நாட்டு அரசியல் நெருக்கடி மற்றும் மக்களிடையே குறைந்த ஆதரவு போன்ற காரணிகளினால் ட்ரூடோ பதவி விலகினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, நேற்று உரையாற்றிய ஜஸ்டின் ட்ருடோ –

“கட்சி தனது அடுத்த வலுவான தலைவரை, நாடு தழுவிய தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்த பிறகு, நான் கட்சித் தலைவர் பதவியையும், பிரதமர் பதவியையும் விட்டு விலக விரும்புகிறேன்.

நான் கட்சிக்குள்ளேயே போரிட வேண்டியிருந்தால், அந்தத் தேர்தலில் நான் சிறந்த தேர்வாக இருக்க முடியாது என்பது எனக்குத் தெளிவாகிவிட்டது.

“நமது கட்சிக்கும் நாட்டிற்கும் மிகவும் முக்கியமான விஷயங்களுக்காகப் போராடுவதில் இருந்து எப்போதும் பின்வாங்க மாட்டேன் என்பதுடன் கனேடியர்களின் நலன்களுக்காவும் ஜனநாயகத்தின் நலனுக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளேன்” என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லிபரல் கட்சியைச் சேர்ந்த இந்திய வம்சாவளியினரான அனிதா ஆனந்துக்கு கனடாவின் அடுத்த பிரதமராகும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சீனாவின் க்சிகாசே நகரை உலுக்கிய நில அதிர்வு; 95 பேர் உயிரிழப்பு!



தென்மேற்கு சீனாவின் க்சிசான் தன்னாட்சி பிராந்தியத்தின் க்சிகாசே நகரில் உள்ள டிங்கிரி கவுண்டியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட 6.8 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வில் குறைந்தது 95 பேர் உயிரிழந்தனர்.

க்சிகாசே நகரில் அந்த நாட்டு நேரப்படி நேற்று காலை 9 மணியளவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வின் காரணமாக 130 பேர் காயமடைந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன என குறிப்பிடப் படுகிறது.

இந்த நில அதிர்வு 6.8 மெக்னிடியூட் அளவில் உணரப்பட்டதாகச் சீன அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், 5 மெக்னிடியூட் அளவில் மற்றுமொரு நில அதிர்வு உணரப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அந்தப் பகுதியில் மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வின் தாக்கம் அண்டை நாடான நேபாளம் மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உணரப்பட்ட போதிலும் சேதம் மற்றும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் பறவை காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு




அமெரிக்காவில் பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்து உள்ளது.

அமெரிக்காவில் பறவை காய்ச்சலுக்கு ஒருவர் உயிரிழந்தமை இதுவே முதல்முறை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தைச் சேர்ந்த 65 வயதுடைய முதியவருக்கு அண்மையில் பறவை காய்ச்சல் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அதிக தொற்று தன்மை கொண்ட H5.N1. ரக வைரஸ் மூலம் பாதிக்கப்பட்ட குறித்த முதியவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என லூசியானா மாகாண சுகாதாரத்துறை தெரிவித்து உள்ளது.

# அசாம் நிலக்கரி சுரங்கத்தில் வெள்ளப் பெருக்கு: 3 தொழிலாளர்கள் உயிரிழப்பு; மீட்பு பணி தீவிரம்!





வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் வெள்ளம் சூழ்ந்த நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கியுள்ள சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் இந்திய மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

சுரங்கத்தில் சிக்கிக் கொண்ட ஒன்பது தொழிலாளர்களில் மூவர் உயிரிழந்து விட்டனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசாமின் திமா ஹசாவ் மாவட்டத்தில், பெயர் பெற்ற பகுதியான உம்ராங்சோவின் 3 கிலோ பகுதியில் 'எலி வளை' நிலக்கரி சுரங்கத்தில் திடீர் வெள்ளம் புகுந்ததால் நேற்று முன்தினம் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சுரங்கத்தில் சிக்கியுள்ள ஆறு தொழிலாளர்களை மீட்கும் பணிகளை இராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை உள்ளிட்ட பல அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

2014 முதல் இந்தியாவில் இது போன்ற சுரங்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், அஸ்ஸாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களில் சிறிய சட்டவிரோத சுரங்கங்க அகழ்வு செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படுகின்றன.

இந்தியாவின் வடகிழக்கில் சுரங்கம் தொடர்பான பேரழிவுகள் அசாதாரணமானவை அல்ல.

2018 டிசம்பரில் அண்டை மாநிலமான மேகாலயாவில் உள்ள ஒரு சட்டவிரோத சுரங்கத்துக்குள் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றுத் தண்ணீர் புகுந்ததால் குறைந்தது 15 பேர் அதில் சிக்கிக் கொண்டனர்.

அவர்களில் ஐந்து சுரங்கத் தொழிலாளர்கள் தப்பிக்க முடிந்தது, ஆனால் மற்றவர்களுக்கான மீட்பு முயற்சிகள் 2019 மார்ச் முதல் வாரம் வரை நீடித்த நிலையில் இரண்டு உடல்கள் மாத்திரம் மீட்கப்பட்டிருந்தன.

2024 ஜனவரியில் நாகாலாந்து மாநிலத்தில் எலி வளை நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க - காங்கிரஸ் மோதல்; மாநகராட்சியில் பரபரப்பு

காங்கிரஸ் மேயருக்கும் துணை மேயர் உள்ளிட்ட தி.மு.க. கவுன்சிலர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக கும்பகோணம் மாநகராட்சியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கும்பகோணம் மாநகராட்சியில் மேயராக காங்கிரஸ் கட்சியின் க.சரவணனும், துணை மேயராக மாநகர தி.மு.க. செயலாளர் சுப.தமிழழகனும் பதவியில் உள்ளனர்.

இந்த நிலையில், மாமன்றக் கூட்டங்களுக்கான நிகழ்வுகளை சேர்ப்பது தொடர்பாக மேயருக்கும் தி.மு.க. கவுன்சிலர்களுக்கும் இடையே கூட்டத்துக்கு கூட்டம் பிரச்சினை வெடித்து வருகிறது.

இந்நிலையில், அண்மையில் நடந்த கூட்டத்திலும், தீர்மானங்கள் தொடர்பான கோப்புகளைக் காட்ட வேண்டும் என தி.மு.க. கொறடா தட்சிணாமூர்த்தி உள்ளிட்டவர்கள்



கூச்சலிட்டனர்.

இதற்கு, கோப்புகளை நாளை வழங்குவதாகச் சொல்லிவிட்டு தனது அறைக்குச் செல்ல எழுந்தார் மேயர்.

அப்போது தட்சிணாமூர்த்தி, ஓடிச் சென்று மேயரின் அறை வாசலில் வழியை மறித்து படுத்துக் கொண்டு, "பதில் சொல்லிட்டுப் போங்க" என குரல் கொடுத்தார். பதில் பேசாத மேயர், அவரை தாண்டிக் குதித்துச் செல்ல முயன்றார்.

அப்போது, "ஐயோ... மேயர் என்னைக் கொல்றாரு" என அலறினார் தட்சிணாமூர்த்தி. பதிலுக்கு மேயரும், "ஐயோ... எனக்கு நெஞ்சு வலிக்குதே" என தரையில் அங்கியுடன் படுத்து உருண்டு கதறினார். உடனே, தட்சிணாமூர்த்தி தனக்கும் நெஞ்சு வலிப்பதாக சொல்லவே, இருவரும் பாரபட்சமில்லாமல் மருத்துவமனையில் 'நெஞ்சுவலி சிகிச்சை'க்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதனால், கும்பகோணம் மாநகராட்சியில் பரபரப்பு ஏற்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2025




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தை குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்குச் சுமையாகத் தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுகள் மட்டும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்களின் திறமை மூலம் இன்று முன்னேற்றகரமான பலன்கள் காண்பீர்கள். நீண்ட காலத் திட்டம் அமைக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்புக்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாகச் சுய முனேற்றப் பாதையில் செல்வீர்கள். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். பணியில் உங்கள் கூடுதல் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். எனவே அதனை மாற்றித் துடிப்புடன் செயல்பட வேண்டும். நேர்மறையான கண்ணோட்டம் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு அனுகூலமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று ஏற்படும் அதிக செலவுகள் தவிர்க்க முடியாதன. எனவே செலவுகளைக் கட்டுபடுத்துங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முதுகு வலி மற்றும் இருமல் போன்ற பாதிப்புகள் காணப்படும்.




உங்கள் தவறுகளை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும். உங்கள் செயல்களில் கட்டுப்பாடு வேண்டும். உங்கள் செயல்களை முறைப்படுத்தி ஆற்றுவதன் மூலம் இழப்பு ஏற்படாமல் இருக்கும்.

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நீங்கள் திட்டமிட்டு பணத்தை செலவு செய்ய வேண்டும்.




இன்று துடிப்பான முன்னேற்றகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்களை முன்னேற்றிக் கொள்வதில் முனைவீர்கள். இன்று உங்களுக்கென சிறப்பம்சத்தை உருவாக்குவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். சரியான நேரத்தில் அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். அதன் காரணமாக முன்னேற்றம் அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இருவருக்கிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படுவதால் சிறப்பான நாளாக இருக்கும். இந்தப் பணம் ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சோதனையான நாளாக இருக்கும். எதைப்பற்றியும் கவலையின்றி அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் ஆதாயம் கிடைப்பது கடினம். சிறிய செயல்களை முடிக்க கடுமையான முயற்சி தேவைப்படும். சக பணியாளர்களுடனான உறவு நல்லுறவாக இருக்காது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இது முற்றிலும் தேவையற்றது. எனவே நட்பான அணுகுமுறையோடு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுப்புகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று முதுகுவலி வாட்டும். பதற்றமும் குழப்பமும் காணப்படும்.




ஆன்மீக விழிப்புணர்வும் ஈடுபாடும் மகிழ்ச்சி அளிக்கும். இன்று அனுபவத்தின் மூலம் பாடம் கற்க நேரலாம்.

பணி வளர்ச்சி சராசரியைவிடச் சற்றுக் கூடுதலாக இருக்கும். இன்று அதிக பணிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

உறவுப் பிணைப்பு வலுவற்றதாக இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க நட்பான அங்குமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதி நிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதன் வேகத்தில் நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். எனவே திட்டமிட்டு செயற்படுங்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2025




முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உங்கள் உணர்ச்சியுடன் போராடி உங்கள் சுய முன்னேற்றத்துக்கு முயல வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நண்பர் இல்ல விழாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருப்பீர்கள். பதற்றமான சூழ்நிலை ஏற்படும் என்பதால் அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். வறுத்த மற்றும் கார உணவுகளை தவிர்த்தல் நல்லது.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். முக்கிய முடிவுகள் இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எந்தச் சவால்களையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று மகிழ்ச்சியான மன நிலையில் இருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சி உங்கள் செயல்களில் வெளிப்படும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இன்னும் மகிழ்ச்சியாக இருக்க இயலும்.

உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டுமென்ற உறுதி உங்கள் அணுகு முறையில் காணப்படும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை உண்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை ஏற்படுத்த உங்களுக்கு வளர்ச்சி ஏற்படுத்தும் வகையிலான சேமிப்பு திட்டத்தில் கலந்து கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சி குறைந்து காணப்படும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பணிகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்ள வேண்டும். சக பணியாளர்களுடன் கருத்து வேற்றுமை காணப்படும்.

உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வதன் மூலம் பிரச்சினை ஏற்படலாம். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் அசௌகரியம் காரணமாக இன்று உங்களுக்கு முட்டி வலி பாதிப்பு ஏற்படும்.




# பயிர்ச்செய்கை பாதுகாப்புக்கு மாத்திரம் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதி

பயிர்ச்செய்கைகளை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்காக மாத்திரம் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதி வழங்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய தேவைகளுக்காக தற்போது துப்பாக்கிகளை வழங்கும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பொலிஸ் மற்றும் முப்படைகளினால் தனிப்பட்ட பாதுகாப்புக்காக சிவில் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு கையளிப்பதற்கு எதிர் வரும் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதிக்கு பின்னர் துப்பாக்கிகளைக் கையளிக்காத நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

இதனிடையே சிவில் நபர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் தொடர்பான கணக்காய்வு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.